**OS. 39/2014**

**நாள். 22.02.2023.**

**வா.சா. 5 –** ராமைய்யா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் வாதி சொன்னதின்பேரில் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாதி சொன்ன தகவலின் பேரில் தான் நான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொந்தமாகத்தான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் தாவா சொத்து அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று பரிகாரம் கோரியுள்ளார். முத்துவெயிலு சேர்வை முத்துராமு சேர்வைக்கு உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த உயிலில் எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. உயிலில் கண்ட சொத்துக்கள் முத்துவெயிலு சேர்வைக்கு எப்படி பாத்தியம் கிடைத்தது என்ற விவரம் தெரியுமா என்றால் அச்சொத்துக்கள் முத்துவெயிலு சேர்வையால் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும். என் தகப்பனார் வெண்ணீர்வாய்க்காலில் குடியிருந்து வந்தார் என்பதற்கு ஆவணம் போடவில்லை என்றால் சரிதான். உயிலில் என் தகப்பனார் கையெழுத்து போட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் சொல்லித்தான் தெரியும். தாவா சொத்து சம்மந்தமாக O.S.No.56/1970 என்ற வழக்கு பரமக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக O.S.No.24/2004 என்ற வழக்கு முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் நடந்த விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. E.P.37/1978 வழக்கில் தாவா சொத்துக்களை பொறுத்து வெள்ளைச்சாமிக்கு தாவா சொத்து ஒப்படைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் 1, 2 இலக்க சொத்துக்களை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு

தெரியாது. தாவா 3ம் இலக்க சொத்து 4, 5 பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை பொறுத்து 4, 5 பிரதிவாதிகள் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகளை 1ம் வாதி சொத்தினை அனுபவிக்கவிடாமல் இடைஞ்சல் செய்தது தொடர்பாக பரமக்குடி தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள முத்து இருளப்பன் சேர்வை மகன் குமரகுரு எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. முத்துவெயிலு சேர்வை 1966 ல் இறந்தார். என் தகப்பனார் உயில் பத்திரத்தில் கையெழுத்து செய்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் போடவில்லை என்றால் சரிதான். எனக்கு உயில் பத்திரத்தை பற்றி எந்த விவரமும் தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை வாதி வீரபாண்டியன் சொன்ன விவரங்களின் அடிப்படையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னை வாதி வீரபாண்டியன் தான் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திற்கு இன்று கூட்டிவந்துள்ளார் என்று சொன்னால் சரிதான். உயில் பத்திரத்தை யார் தயார் செய்தது என்பதும் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்பதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். உயில் ஆவணத்தின் அசல் பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நகலை பார்த்தேன். என்னை சாட்சி சொல்ல கூப்பிடும்போது உயில் பத்திரத்தின் நகலை பார்த்தேன். தாவா சொத்து முத்துவெயிலு சேர்வைக்கு எப்படி பாத்தியம் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முத்துவெயிலு சேர்வை 25.03.1960 அன்று உயில் எழுதி வைக்கும்போது நல்லநிலையில் இருந்தார் என்ற விவரமும் அவர் அன்றைய தினம் உயில் எழுதிவைத்த விவரமும் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தில் முத்துவெயிலு சேர்வை கையெழுத்து போட்டாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி உயிலில் கண்ட நபர்கள் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றும் என் தகப்பனார் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சி

சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் கையெழுத்திட்ட வேறு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் பத்திரத்தில் சாட்சி கையெழுத்திட்ட நபர்களை எனக்கு தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள சுப்பிரமணியபிள்ளை என்பவரை எனக்கு யார் என்று தெரியாது. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

5 முதல் 12 மற்றும் நீதிமன்ற காப்பாளரான 15 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

மேற்கண்ட 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.